
## திராவிடத்தால் வாழ்கிறோம்

919

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

132





# தூய்மை இயக்கம் – தூய்மை தமிழ்நாடு நிறுவனம்!

## திடக்கழிவு மேலாண்மையில் 2.0.

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

இந்தியாவில், அதிவேகமாக நகரமயமாக்கல் நடந்துகொண்டிருக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. குறிப்பாக, திராவிட மாடல் ஆட்சியின் கடந்த நான்காண்டு காலத்தில் தொழில்துறையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம், அதிவேக நகரமயமாக்கலைச் சாத்தியமாக்கி யிருக்கிறது.

அதிவேக நகரமயமாக்கல் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று திடக்கழிவு மேலாண்மை. அதற்கு தனி கவனம் செலுத்த வில்லை எனில், சுற்றுச்சூழல் மாசுபாடும் சுகாதாரக் கேடும் சமச்சீரான வளர்ச்சிக்குப் பெரும் பின்னடைவும் ஏற்படும்.

குறிப்பாக, திடக்கழிவுகளை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அப்புறப்படுத்துவது, பொதுமக்களின் பங்கு, உள்கட்டமைப்பு வசதி போன்றவை, தற்போது பெரும் சவாலாக உள்ளன. இதற்கு தனி கவனம் செலுத்தும் வகையில் 2025 பிப்ரவரி மாதம் ‘தூய்மை இயக்கம்' என்கிற ஒருங்கிணைந்த அமைப்பை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கீழ் ஏற்படுத்த, நம் திராவிட மாடல் அரசு ஆலோசனை செய்து வந்தது.

மார்ச் 27-ஆம் தேதி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ‘தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற, ஊரகப் பகுதிகளில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வதில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், ‘தூய்மை இயக்கம்' என்ற ஒருங்கிணைந்த அமைப்பு, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கீழ் ஏற்படுத்தப்படும்' என்று அறிவித்தார்.

### நிபுணர்கள் குழு

இதையடுத்து, மாநில அளவில், தலைமைச்செயலர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலரை ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட அந்தக் குழுவில், நிதி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயலர்கள், சுற்றுச்சூழல் நிபுணர்கள் இடம் பெற்றனர்.

இவர்கள் தவிர, மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட அளவிலான தூய்மைக் குழுவும், வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில் வட்டார அளவிலான குழுவும் அமைக்கப்பட்டன. இந்த தூய்மை இயக்கத்துக்காக ‘தூய்மை தமிழ்நாடு நிறுவனம் (சி.டி.சி.எல்.)' உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

தூய்மை இயக்கத்தின் மாநில அளவிலான குழுவின் முதல் கூட்டம் 30.04.2025 அன்று நடைபெற்றது. முதற்கட்டமாக, உலக சுற்றுச்சூழல் தினமான 05.06.2025 அன்று தமிழ்நாடு முழுவதும், தலைமைச் செயலகம், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநகரங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் உள்பட 1,100 அலுவலகங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணுக் கழிவுகள், உலோகக் கழிவுகள், காகிதக் கழிவுகள், கண்ணாடிக் கழிவுகள், பயன்படுத்த இயலாத மரத் தளவாடங்கள் போன்ற பலவிதமான கழிவுகளைச் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் 593 டன் அளவுள்ள கழிவுகள் சேகரிக்கப்பட்டு, முதற்கட்டமாக திட்டத்தின் செயல்பாட்டினை உறுதி செய்தது.

அன்றே (ஜூன் 05 ஆம் தேதி) திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்கள், தூய்மை இயக்கத்தை அரசு மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தவும், வழிகாட்டுதல்களை வழங்கினார்.

### தூய்மை தமிழ்நாடு நிறுவனம்

இதைத் தொடர்ந்து ஜூன் 23 அன்று முதல் அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தூய்மை இயக்கத்தின் கூட்டத்தில், தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார், முதலமைச்சர்.

இந்த நிறுவனம் உள்ளாட்சி அமைப்புகளின் கழிவு மேலாண்மையைக் கண்காணித்து கருத்துகளை வழங்கும். உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குவதற்கு தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார். அனைத்து அரசுத் துறைகளும் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்துடன் இணைந்து செயல்படவும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் கழிவுகளை, உற்பத்தி ஆகின்ற இடங்களிலேயே தனித்தனியாகப் பிரித்து கையாள வேண்டும் என்றும், இதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகள் குப்பைக் கிடங்குகளை மட்டுப்படுத்தி, புதிய கழிவுகளை, குப்பைக் கிடங்குக்கு அனுப்புவதை நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். அத்துடன் ‘Real-Time Data'-வை உள்ளாட்சி அமைப்புகள் பகிர வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

### நவீன தொழில்நுட்பம்

திடக்கழிவு மேலாண்மையில் நவீன தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்கும் வகையில், ‘தூய்மை தமிழ்நாடு' நிறுவனம் சென்னை ஐ.ஐ.டி. (*Indian Institute of Technology, Madras*) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தானது.

மாநிலம் முழுவதும் உருவாகும் திடக்கழிவு களை, அறிவியல்பூர்வமாக அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சரியான முறையில் கையாள்வதற்கும், கழிவுகளை மறுசுழற்சி செய்யவும் ஒரு வலுவான ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்க, இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.



**“திடக்கழிவு மேலாண்மையில் நவீன தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்கும் வகையில், ‘தூய்மை தமிழ்நாடு' நிறுவனம் சென்னை ஐ.ஐ.டி. இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.”**

ஏற்கெனவே, சுற்றுச்சூழல் தினத்தன்று (05 06.2025) திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு, மறுசுழற்சி மேற்கோள்ளப்பட்ட வகையில், சுமார் 60 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது தூய்மை தமிழ்நாடு நிறுவனம்.

திடக்கழிவு மேலாண்மை யில் வருவாய் ஈட்டுவது தூய்மை தமிழ்நாடு நிறு வனத்தின் ஒரு இலக்காக இருக்கலாம். ஆனால், தூய்மை இயக்கத்தின் நோக்கம் என்பது, ஒவ்வொரு வீட்டிற்கும் தூய்மை குறித்த விழிப்புணர்வைக் கொண்டு செல்வதுதான். குப்பை கொட்டும் இடங்களை சுத்தம் செய்து, மரங்கள் நட்டு, மக்கள் பயன்படுத்தும் விதமாக தூய்மை முனைகளாக மாற்றிட மக்களை ஊக்குவித்திட வேண்டும் என்பதுதான். கழிவு மேலாண்மையின் நவீன தொழில்நுட்பமும், கழிவுகளைக் கையாள்வதில் மக்கள் கொண்டுள்ள அக்கறையும் தூய்மைத் தமிழ்நாட்டினை உருவாக்கும். அதை சாத்தியமாக்குகிறது திராவிட மாடல் அரசு.

**...சாதனை தொடரும்**

## சட்டமன்ற மாண்புகளை மதிக்காத பா.ஜ.க.!

மகாராஷ்டிராவில் சீட்டுக்கட்டுகள் போல கட்சிகள் கலைக்கப்பட்டு, சின்னங்கள் பறிக்கப்பட்டு, ஆட்சி கவிழ்க்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளில் எண்ணற்ற அரசியல் சித்து விளையாட்டுகள் நடந்திருக்கின்றன. அதன் தொடர்ச்சியாகத்தான் கடந்த ஆண்டு அங்கு பாரதிய ஜனதா கட்சி ஆட்சியமைத்தது. அதிலும் கூட, “சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களில் பெரும்பாலான வாக்குகள் பா.ஜ.க.-வுக்கு சென்றிருக்கின்றன. இதில் பெரும் மோசடி நடந்துள்ளது” என ராகுல் காந்தி குற்றம்சாட்டியிருந்தார்.

அப்படி அமைந்த பா.ஜ.க. ஆட்சியில் வேளாண் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாணிக்ராவ் கோகடே. சமீபத்தில், அவர் சட்டமன்றத்தில் ரம்மி விளையாடிய வீடியோ காட்சிகள் வைரலாகி, விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. 18 - 22 நிமிடங்கள் வரை அவர் தொடர்ந்து ரம்மி விளையாடியதாகக் கூறப்படுகிறது. ‘அமைச்சர் ஒருவரே சட்டமன்ற மாண்புகளை மதிக்காமல், இப்படி பொறுப்பற்ற தன்மையில் நடந்துகொள்ளலாமா? அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்' என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

ஆனால் ‘ரம்மி விளையாட்டில் ஆர்வம் கொண்ட மாணிக்ராவ் கோகடேவுக்கு சரியான துறை வேளாண் துறை அல்ல, விளையாட்டுத் துறைதான்' என அவரை விளையாட்டுத்துறைக்கு மாற்றியிருக்கிறது மகாராஷ்டிர பா.ஜ.க. அரசு. இது கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. தத்தாத்ரே பர்னே என்பவர் புதிய வேளாண் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த மாணிக்ராவ் கோகடே ஏற்கெனவே ஒருமுறை விவசாயிகளை, பிச்சைக்காரர்கள் எனக்கூறி சர்ச்சையில் சிக்கியவர். 1995-இல் வீட்டு மோசடி வழக்கிலும் சிக்கியுள்ளார். இத்தகைய நபர்களை அமைச்சராக வைத்துக்கொண்டுதான் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைக் குறைசொல்லிக்கொண்டிருக்கிறார்கள் பா.ஜ.க.-வினர்.

## ஃப்ளாஷ்பேக்



### கவுந்தப்பாடியில் தலைவருக்கு வரவேற்பு!



கவுந்தி இராஜேந்திரன்

1991-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஈரோடு மாவட்டத்துக்கு, கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சி களுக்கு வருகை தந்தார். தலைவருக்கு கவுந்தப்பாடியில் வரவேற்பு அளித்தோம். அப்போது, இளைஞர் அணியில் தலைவரை வரவேற்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அருகில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எவரெஸ்ட் கணேசன் உள்ளார்.

**– கவுந்தி இராஜேந்திரன், தலைமைக்கழகப் பேச்சாளர், கவுந்தப்பாடி, ஈரோடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நினைவுக் குறிப்பு

**நம் வரலாறு** (side label)

### தி.மு.க. மாணவர் மாநாடு!

24-1-51-இல் அன்றைய வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடியில் தி.மு.க மாணவர் மாநாடு நடைபெற்றது. பி.ஆர்.கோகுலகிருட்டினன் தலைமை வகித்தார். இராம. அரங்கண்ணல் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.